<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 58/2025</u>

<u>26.03.2026</u>

<u>LW: 7 PW:6</u>

**திரு. பன்னீர்செல்வம், த/பெ. குழந்தைவேலு**

**<u>எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி பன்னீர்செல்வத்தை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணையின் தொடர்ச்சி</u>**

எதிரி குமாரிடம் நான் 04.07.2015 ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் **எதிரி குமாரின் வாக்குமூலம் ஆகும். அது அ.த.சா.ஆ.39** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதே போல் எதிரி ஜெயபால் என்பவரிடம் நான் 12.06.2015 ல் வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் **எதிரி ஜெயபால் என்பவரின் வாக்குமூலம் ஆகும். அது அ.த.சா.ஆ.40** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதே போல் தணிக்கை அறிக்கை 17.12.2013 முதல் 23.12.2013 வரைக்கான ஆவணத்தை பார்வையிட்டேன். என்னிடம் காட்டப்படும் தணிக்கை அறிக்கை நான் பார்வையிட்டு தணிக்கை செய்த அறிக்கை ஆவணம். **அந்த தணிக்கை அறிக்கை அ.த.சா.ஆ.41** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதே போல் 03.03.2013 ந் தேதி **தீர்மானம் பக்க எண்.57 ல் நான் எனது விசாரணையின் போது பார்வையிட்டேன். அந்த பக்கம் அ.த.சா.ஆ.42** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

துணைப்பதிவாளர் மன்னார்குடி அவர்களது செயல் முறை ஆணை ந.க.எண்.242/2015 தொ.வே.நாள்.28.012015 ன் படி 01.04.2013 முதல் 31.12.2014 முடிய உள்ள காலத்திற்கு விசாரணை மேற்கொள்ள எனக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. இணைப்பதிவாளர் புதுக்கோட்டை அவர்கள்

ட்டி.1488 பாமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பறக்கும் படை ஆய்வு மேற்கொண்டு மாநில பதிவாளர் சென்னை அவர்களுக்கு அனுப்பிய கமுக்கக்கடிதம் ந.க.எண்.1/2015 இ.ப நாள் 11.01.2015 ன் படி எனக்கு அனுப்பப்பட்டு அதன்படி அதனையும் சேர்த்து விசாரணை மேற்கொள்ள எனக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

அதன்படி நான் 01.04.2013 தேதிக்கு முன்னர் உள்ள நகை கடன் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அதில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி எனது அறிக்கையை சமர்ப்பித்தேன். என்னிடம் காட்டப்படும் வரிசை எண்.31 இணைப்பதிவாளர் புதுக்கோட்டை அவர்கள் பதிவாளர் சென்னைக்கு அனுப்பிய கடிதம் நாள் 11.01.2015 தேதிய கடிதம் நகல் மற்றும் இணைப்பதிவாளர் புதுக்கோட்டை அவர்கள் பிரிவு 81 விசாரணைக்கு அனுப்பிய கடிதம் ந.க.எண்.1/2015 இ.ப.நாள்.08.05.2015 ஆகும். அந்த கடிதங்கள் **அ.த.சா.ஆ.43** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10.01.2015 ல் இணைப்பதிவாளர் புதுக்கோட்டை அவர்கள் தனது குழுவுடன் நகை இருப்பு சரிபார்த்த போது இருப்பில் இல்லை என குறிப்பிட்டுள்ள 79 இனங்களில் வசூலான 75 இனங்கள் போக எஞ்சிய 4 இனங்களில் தொகை வசூலிக்கப்படாத நிலையில் சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

கடன் பேரேடு பக்க எண்.50 ல் 16.06.2011 ல் கடன் எண்.647 ன் படி ரூ.10,500/- கடன் வழங்கப்பட்டு கடன் தொகை வசூலாக வில்லை. என்னிடம் காட்டப்படும் **வரிசை எண்.27 கடன் பேரேடு பக்க எண்.50 அ.த.சா.ஆ.44** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடன் பேரேடு பக்க எண்.159 ல் 22.11.2011 ல் கடன் எண்.756 ன் படி ரூ.28,800/- கடன் வழங்கப்பட்டு கடன் தொகை வசூலாக வில்லை. என்னிடம் காட்டப்படும் **வரிசை எண்.27 கடன் பேரேடு பக்க எண்.159 அ.த.சா.ஆ.45** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடன் பேரேடு பக்க எண்.384 ல் 08.09.2012 ல் கடன் எண்.979 ன் படி ரூ.1,10,000/- கடன் வழங்கப்பட்டு அதில் 18.03.2013 ல் ரூ.60,000/- வசூலிக்கப்பட்டு

மீதி ரூ.50,000/- கடன் தொகை வசூலாகாமல் இருந்தது. என்னிடம் காட்டப்படும் **வரிசை எண்.27 கடன் பேரேடு பக்க எண்.384 அ.த.சா.ஆ.46** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடன் பேரேடு பக்க எண்.57 ல் 22.03.2014 ல் கடன் எண்.1051 ன் படி ரூ.60,000/- கடன் வழங்கப்பட்டு அதில் 24.05.2014 ல் அசல் ரூ.60,000/- மும், வட்டி ரூ.1,200/- வசூல் காட்டப்பட்டு தொகை சங்க ரொக்கப்புத்தகத்திற்கு கணக்கிற்கு கொண்டு வரப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் **வரிசை எண்.26 கடன் பேரேடு பக்க எண்.57 அ.த.சா.ஆ.47** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆக இவ்வினத்தில் அசல் ரூ.1,49,300/- ம், வட்டி ரூ.1,200/- ம் ஆக கூடுதல் ரூ.1,50,500/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

மேலே கண்டுள்ள கையாடலுக்கு எதிரி 1 என். தினகரன், எதிரி 3 வி.குமார் மற்றும் எதிரி 4 ஆர். ஜெயபால் எவ்வாறு பொறுப்பாகிறார்கள் என்பதை ஏற்கனவே விரிவாக கூறியுள்ளேன். இவ்வினம் தொடர்பாக எதிரி 3 வி.குமாரை விசாரித்ததில் அவர் தனது 04.07.2015 ந் தேதிய வாக்குமூலம் பக்க எண்.11 ல் இந்த நகைப்பாக்கெட்டுகள் இல்லை என்பதையும், மேலும் கடன் பேரேட்டில் கடன் எண்.1051 ல் 24.05.2014 ல் வரவு காட்டப்பட்ட ரூ.61,200/- ரொக்கப்புத்தகத்தில் வரவாகவில்லை.

அவ்வாறு இதுகுறித்து எதிரி 1 என். தினகரனை விசாரித்ததில் அவர் தனது வாக்குமூலம் நாள் 07.07.2015 ந் தேதி பக்க எண்.43 மற்றும் 44 ல் இந்த 4 இனங்களிலும் நகைப்பாக்கெட்டுகள் இல்லை என்பதையும் கடன் எண்.1051 ல் கடன் பேரேட்டு படி வரவு காட்டப்பட்ட தொகை ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும், இது குறித்து எதிரி 4 ஆர். ஜெயபால் தனது 12.06.2015 ந் தேதிய வாக்குமூலத்தில் பக்க எண்.21 மற்றும் 22 ல் தான் கையொப்பமிட்டுள்ளதை ஒப்புக்கொண்டுள்ளதுடன் 03.03.2014 ல் தீர்மானம் ஏற்றப்பட்டிருந்தும் கூட தான் அதற்கொப்ப இருப்புகளை சரிபார்க்கவில்லை என்பதையும், நகை இருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும், அவர்களது வாக்குமூலம் பக்க எண்.26 ல் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகைகளிலிருந்து பணம் எடுப்பதற்கு சங்க செயலாளர் (பொறுப்பு) உடன் தானும் கையொப்பம் இடவேண்டும் என 09.05.2013 ந் தேதிய தீர்மானம் எண்.4 ன் படி உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

அந்த தீர்மானங்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்தில் இவற்றால் எதிரி 1 தினகரன் மற்றும் எதிரி 3 குமார் ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் உடந்தையாக செயல்பட்டு ரூ.1,50,500/- ஐ கையாடல் செய்துள்ளதற்கு எதிரி 4 ஆர். ஜெயபால் உடந்தையாக செயல்பட்டுள்ளார்.

மேலும், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மன்னார்குடி கிளையிலிருந்து சேமிப்பு கணக்கிலிருந்து காசோலை கொடுத்து பெற்ற தொகையை கணக்கிற்கு கொண்டு வராமல் கையாடல் செய்யப்பட்டுள்ளது. வரிசை எண்.88 காசோலை எண்.814096 ன் படி 02.12.2013 ல் ரூ.2,00,000/- ரொக்கமாக பெறப்பட்டு ரொக்கமாக வைக்கமால் வாடகைக்கு கொடுத்ததாக உளவடை கணக்கில் வரவு செலவு செய்யப்பட்டுள்ளது. ரொக்கப்புத்தகம் பக்க எண்.73 இந்த தேதியில் இந்த தொகை ரொக்கமாக வரவு வைக்கப்படவில்லை.

வங்கியிலிருந்து காசோலை தொகையை ரொக்கமாக வாடகை கொடுத்திருந்தாலும் கூட அதற்கான பற்றுச்சீட்டினை பெற்று சங்கத்தில் வைத்திருக்கவேண்டும். ஆனால் சங்கத்தில் அவ்வாறான பற்றுச்சீட்டுகள் ஏதும் இல்லை. **காசோலை எண்.814096 அடிக்கட்டளை அ.த.சா.ஆ.48 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.73 அ.த.சா.ஆ.49 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

காசோலை எண்.864971 நாள் 04.03.2016 ல் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மன்னார்குடி கிளையிலிருந்து ரூ.5,00,000/- ரொக்கமாக எடுக்கப்பட்டு ரொக்கப்புத்தகம் பக்க எண்.112 ல் ரூ. 3,00,000/- மட்டும் ரொக்கமாக வரவு வைக்கப்பட்டு மீதம் ரூ.2,00,000/- ரொக்க கணக்கிற்கு கொண்டு வரப்படாமல் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

**காசோலை எண்.864971 அடிக்கட்டளை அ.த.சா.ஆ.50 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.112 அ.த.சா.ஆ.51 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

காசோலை எண்.918660 தேதி 26.11.2016 ல் ரூ.2,15,000/- ரொக்கமாக பெறப்பட்டு சங்க ரொக்கப்புத்தகத்தில் ரொக்க கணக்கில் வரவு வைக்கபடாமல் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **காசோலை எண்.918660 அடிக்கட்டளை அ.த.சா.ஆ.52 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.9 ரொக்கப்புத்தகம் பக்கம் எண். 62 அ.த.சா.ஆ.53 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆக இவ்வினத்தில் கூடுதல் தொகை ரூ.6,15,000/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மன்னார்குடி கிளையிலிருந்து வங்கி மேலாளரிடம் நான் கடிதம் கொடுத்து மேற்சொன்ன காசோலைகளை 11.05.2015 ந் தேதி பெற்று பார்வையிட்டேன். கடித்ததுடன் கூடிய காசோலைகள் **அ.த.சா.ஆ.54 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

09.05.2013 ந் தேதிய தீர்மானம் புத்தகம் பக்க எண்.44 ல் தீர்மானம் எண்.4 ல் சங்கத்தின் பேரில் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் மற்றும் மன்னார்குடி கிளையில் உள்ள சேமிப்பு கணக்குகள் மற்றும் காசு கடன் கணக்குகள் ஆகியவற்றில் சங்கத்தின் தலைவர் திரு. ஆர்.ஜெயபால் அவர்களும் மற்றும் சங்கத்தில் பொறுப்பு செயலாளர் திரு. என். தினகரன் அவர்களும் கூட்டாக வரவு செலவு செய்ய அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் மன்னார்குடி கிளைக்கும் அனுப்பப்பட்டுள்ளதால் தான் மேலே குறிப்பிட்டுள்ள தேதிகளில் உள்ள காசோலைகளை குறிப்பிட்டுள்ள மூன்று காசோலைகளில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.2,00,000/- , ரூ.5,00,000/- மற்றும் ரூ.2,15,000/- ரொக்கமாக பெறப்பட்டுள்ளது. அந்த காசோலைகளில் குறிப்பிட்டுள்ள தொகைகளை செயலாளர் (பொறுப்பு) எதிரி 1 தினகரன் வசம் ஒப்படைக்க கேட்டு செயலாளர் (பொறுப்பு) எதிரி 1 மற்றும் எதிரி 4 ஆர். ஜெயபால் தலைவரால் மேற்குறிப்பு செய்யப்பட்டு அதன் கீழே தொகையை

பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக எதிரி 1 செயலாளர் (பொறுப்பு) என். தினகரன் கையொப்பமிட்டு கொடுத்துள்ளார்.

சங்கத்தில் ரொக்க இருப்பு தேவைக்கு அதிகமாக உள்ளபோது சங்க ரொக்கப்புத்தகத்தை பார்த்து அறிந்து கொள்ளாமல் எதிரி 4 ஆர்.ஜெயபால் ,எதிரி 1 என். தினகரன் கொடுத்துள்ள காசோலையை இவரும் கையொப்பமிட்டு தேவையே இல்லாமல் இத்தொகைகளை பெற ஏற்பாடு செய்துள்ளார். சட்டப்பிரிவு 84 ன் படி முறையாக கணக்கு எழுதுவதை உறுதி செய்து வரவேண்டியது. எதிரி 1 என். தினகரன் தலையான கடமை என்பதையும் , அதனை வலியுறுத்தி சங்க தனி அலுவலர் 05.08.2011 ல் நிர்ணயம் கொடுத்துள்ளார். கடமைகளையும், பொறுப்புகளையும் பற்றிய ஆணையை இவர் 05.08.2011 ல் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதுடன், அந்த ஆணையில் சங்க எழுத்தர் துணை தினக்குறிப்பு பேரேடுகள் மற்றும் ரொக்கப்புத்தகத்தை எழுதவேண்டும் என்ற ஆணையை செயல்படுத்த தவறி அவ்வாறு செயல்பட தவறியதற்கு எதிரி 1 , சங்க எழுத்தர் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளதுடன் எதிரி 1 தனக்கு நம்பகமான ஒருவரைக் கொண்டு துணை தினக்குறிப்பு வரவு மற்றும் பற்று பேரேட்டு கணக்குகளை எழுத செய்துள்ளதுடன் இவற்றில் எழுதியவரும் கையொப்பம் இடவில்லை.

எதிரி 1 பதிவுகளுக்கு பொறுப்பேற்று கையொப்பம் இடவில்லை. ஆனால் அந்த பேரேடுகளில் உள்ள பதிவுகளின் அடிப்படையில் எதிரி 1 ரொக்கப்புத்தகத்தை எழுதிக்கொடுத்து கையொப்பமிட்டுள்ளார். இவற்றால் இவர் சங்கத்தின் ரொக்கப்புத்தக வரவு செலவுகளை தனி அலுவலக ஆணைப்படி கூட்டு பொறுப்பாக செயல்படுத்தாமல் தனி பொறுப்பாக செயல்படுத்தி இந்த மூன்று இனங்களையும் ரூ.6,15,000/- கையாடல் செய்துள்ளார்.

இவ்வாறான கையாடலுக்கு எதிரி 4 ஆர்.ஜெயபால் இணைந்து செயல்பட்டுள்ளார். இதுகுறித்து எதிரி 1 என். தினகரனை விசாரித்ததில் அவர்

தனது 07.07.2015 ல் வாக்குமூலத்தில் பக்க எண்.44 மற்றும் 45 ல் தான் இந்த ரூ.6,15,000/- ஐ கையாடல் செய்துள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார்.

அவ்வாறே எதிரி 4 ஆர்.ஜெயபாலை விசாரித்ததில் அவர் தனது 12.04.2015 ந் தேதிய வாக்குமூலத்தில் பக்க எண்.26 ரூ.6,15,000/- ஐ கணக்கிற்கு கொண்டு வரவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ள இவர் இந்த கையாடலுக்கு தான் உடந்தை இல்லை எனவும், ஏன் எனில் சங்க ரொக்கப்புத்தகத்தை தான் கேட்டும் எதிரி 1 என்.தினகரன் காண்பிக்கவில்லை என கூறும் இவர் தனது வாக்குமூலம் பக்க எண்.27 ல் இது குறித்து எதிரி 1 ன் மீது தான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

எதிரி 1 உண்மையில் ரொக்கப்புத்தகத்தை காண்பிக்க மறுத்திருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க உரிமை பெற்றவர் சங்கத்தின் தலைவர் மட்டுமே ஆவார். இந்நிலையில் இவர் எதிரி 1 என்.தினகரன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்துள்ள நிலையிலிருந்தே எதிரி 1 என்.தினகரன் ரூ.6,15,000/- பொய் கணக்கு எழுதி கையாடல் செய்திட எதிரி 1 தினகரனுடன், எதிரி 4 ஆர்.ஜெயபாலும் இவ்வினத்தில் கையாடல் செய்துள்ளார்.

**அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதல் விசாரணை நிறுத்தப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.03.26 17:11:52 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்